பக்கங்கள்: 08

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 ஆடி 17 சனிக்கிழமை 02.08.2025 கதிர் 266

## இது ரகசியம் அல்ல!

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் குழு இன்று யாழ்ப்பாணத்தில் கட்சியின் தலைமையகத்தில் கூடுகின்றது. செம்மணிப் ☞ 2

# செம்மணியில் மீட்ட சான்றுப் பொருட்களை அடையாளப்படுத்த மக்களுக்கு அழைப்பு

செம்மணி மனிதப் புதைகுழிகளில் தற்போது தோண்டப்பட்டுவரும் அரியாலை, சிந்துப்பாத்தி இந்து மயானக் குழிகளில் இருந்து மீட்கப்பட்ட சான்றுப் பொருட்களை அடையாளம் காண உதவுமாறு பொதுமக்களுக்கு நீதிமன்றம் பகிரங்க அழைப்பாணை விடுத்துள்ளது.

குற்றபுலனாய்வுத்திணைக்களத்தின், மனிதக்கொலைவிசாரணைப்பிரிவின், நிலைய பொறுப்பதிகாரியாழ். நீதவான் நீதிமன்றில் செய்த விண்ணப்பபத்தின் பிரகாரம் சான்று பொருட்களை அடையாளப்படுத்துவதற்கு ஏதுவாக அவற்றைக் காட்சிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஜூலை 5 செவ்வாய்க்கிழமை மதியம் 01.30 மணி முதல் மாலை 05 மணி வரையில் அரியாலை சிந்துப்பாத்தி இந்து மயானத்தில் சான்றுப் பொருட்கள் மக்களின் பார்வைக்காக வைக்கப்படவுள்ளன.

செம்மணி புதைகுழிகளில் இருந்து இதுவரையில்புத்தகபை,சிறுவர்களின்காலணிகள், குழந்தையின்பால்புட்டி, வளையல்கள் உள்ளிட்ட 54 சான்று பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன. அவை நீதிமன்ற கட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளன.

சான்றுப் பொருட்களை அடையாளப்படுத்தக் கூடியவர்கள், நீதிமன்றுக்கோ குற்றப் புலனாய்வுத் துறையினருக்கோ தெரிவிப்பதன் ஊடாக விசாரணைக்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

அதேவேளை, சான்றுப் பொருட்களைப் பார்வையிட வருவோருக்கான கட்டுப்பாடுகள் நடைமுறைகள் தொடர்பில் இன்று தினம் சனிக்கிழமை அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ☞ 2

# 6 மாதங்களில் 300 பொலிஸார் பணி நீக்கம்

## ஊழல் குற்றச்சாட்டுக்களின் கீழ்

அரச துறையில் உள்ள ஒரு சில ஊழல்வாதிகளால் முழு அரச கட்டமைப்பும் பாதிக்கப்படுகிறது. கடந்த 6 மாதங்களில் 300 இற்கும் மேற்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். ஆளும்தரப்பு என்ற வகையில் எவராக இருந்தாலும் தராதரம் பாராமல் சட்டவிரோதமாக செயற்படும் அனைவருக்கும் எதிராகநாம்சட்டத்தைகடுமையாக நடைமுறைப்படுத்துவோம் என பொதுமக்கள் பாதுகாப்பு ☞ 2

## மேலும் 4 எலும்புக்கூடுகள் செம்மணியில் அடையாளம்

மொத்த எண்ணிக்கை 122



யாழ்ப்பாணம் செம்மணி பகுதியில் உள்ள இரண்டு மனித புதைகுழிகளில் இருந்தும் இன்றைய தினம் வியாழக்கிழமை புதிதாக 04 எலும்பு கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட மனித எலும்புக்கூட்டு தொகுதிகளில் 7 நேற்று முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

அதன் அடிப்படையில் கடந்த 12 நாட்களாக முன்னெடுக்கப்பட்டு அகழ்வு பணியில், 47 எலும்புக்கூட்டு தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன

செம்மணி பகுதியில் 'தடயவியல் ☞ 2

## முன்னாள் அரசுத் தலைவர்களின் ஓய்வூதியம் இரத்தாகவில்லை

புதியசட்டமூலத்தில்எவ்விடத்திலும்முன்னாள் அரசுத்தலைவர்களின்ஓய்வூதியகொடுப்பனவை இரத்துச்செய்வதாக குறிப்பிடப்படவில்லை. ☞ 6

# இலங்கையில் இன்னமும் கண்டுகொள்ளப்படாத அரிய பொக்கிஷம் என்றால் அது பனைமரம்தான்

## கடற்றொழில் அமைச்சர் தெரிவிப்பு

இலங்கையில் இன்னமும்கூடக் கண்டுகொள்ளப்படாத பொக்கிஷம் என்றால் அது பனை மரம்தான் என்று தெரிவித்தார் இலங்கை கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரன்.

பனை அபிவிருத்திச் சபையின் ஏற்றுமதியாளர்களுக்கான வருடாந்தக் கூட்டத்தில் உரையாற்றியபோது இதனைத்தெரிவித்தார். அவர்மேலும்தெரிவித்ததாவது:

அண்மைக் காலங்களில் இந்தப் பனை அபிவிருத்தி தொடர்பில் பல ஏற்றுமதியாளர்களுடன் சந்திக்கக் கிடைத்தது. அந்த ஏற்றுமதிகளையும் ஏற்றுமதியாளர்கள் செயற்படும் விதங்களையும் பார்க்கின்றபோது ஏற்றுமதி வருமானத்தைத் அதிகம் பெற்றுத்தரக்கூடியது பனை என்பதை அறிய முடிந்தது.

இலங்கைக்கு ஏற்றுமதி மூலம் அதிக வருமானத்தை ஈட்டித் தரக்கூடிய விவசாய ☞ 2

## அமெரிக்க வரிக் குறைப்பு நாட்டுக்கு கிடைத்த வெற்றி

### ஹர்ஷ டி சில்வா வரவேற்பு

இலங்கைக்கான பரஸ்பர தீர்வை வரியை அமெரிக்க அரசுத்தலைவர் 20 சதவீதமாக ☞ 6

### இல்மனைட் மணல் அகழ்வை எதிர்த்து

## ஆவணி 6,7 இரு நாள்களும் மன்னாரில் போராட்டம்

மன்னார் மாவட்டத்தில் பல்தேசிய நிறுவனங்களின் இல்மனைட் கனிம மணல் சுரண்டலால் மக்களின் வாழ்விடங்கள் மற்றும் பூர்வீக நிலங்கள் அழிவடையும் அபாயம் உள்ளது. இதனைக் கண்டித்து, மன்னார் மாவட்ட இளையோர் ☞ 2

## அமெரிக்க வரிக் குறைப்பு கூட்டு முயற்சியின் வெற்றி

### நிதி அமைச்சின் செயலாளர் பெருமிதம்

அமெரிக்காவினால் இலங்கைக்கு விதிக்கப்பட்ட 20 சதவீத பரஸ்பர வரி என்பது கூட்டுமுயற்சியின் வெற்றியாகும். எமது சர்வதேசக் கடமைகளை நிறைவேற்றுவதுடன், இலங்கையை மேலும் போட்டித்தன்மையை வாய்ந்தமாக மாற்றியமைக்க சர்வதேச மட்டத்தில் உறுதிபூண்டுள்ளோம். .இலங்கையின் வர்த்தக செயற்பாடுகள் வெளிப்படைத்தன்மையுடனும், பொறுப்புக்கூறும் வகையிலும் அமையும் என்பது அமெரிக்காவுக்கு உறுதியளிக்கப்பட்டது என நிதியமைச்சின் செயலாளர் ஹர்ஷ சூரியபெரும தெரிவித்தார்.

ஆடைத் தொழிற்றுறையில் தேசிய தொழில்முனைவோருக்கான சந்தை ☞ 6

## அமெ. வரியைக் குறைப்பதற்காக எட்டப்பட்ட பாதுகாப்பு, பொருளாதார ஒப்பந்தம் என்ன?

### தெளிவான விளக்கம் கேட்கிறது ஐக்கிய தேசியக் கட்சி

அமெரிக்காவின் வரியை குறைத்துப் பெற்றுக்கொள்ளச் செய்துகொண்டுள்ள ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள அர்த்தமுள்ள பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பு ஒப்பந்தங்களை எட்டுவது தொடர்பாகத் தெளிவான அறிவிப்பொன்றைவெளியிடவேண்டும்எனஆளும்தரப்பைக் கேட்டுக்கொள்கிறோம் என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக ஐக்கிய தேசிய கட்சி விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அரசுத் தலைவர் டொனால்ட் ட்ரம்பினால் விடுவிக்கப்பட்டுள்ள புதிய உத்தரவுக்கமைய பரஸ்பர வரி ☞ 6

## நல்லாட்சிக் காலத்தில் தயாரிக்கப்பட்ட சீர்திருத்தமே கல்வியில் அமுலாகிறது

### ஐக்கிய தேசியக் கட்சி தெரிவிப்பு

ஆளும்தரப்பு தெரிவித்துவரும் கல்விச் சீர்திருத்தமே நல்லாட்சிக் காலத்தில்கல்விதுறைசார்மேற்பார்வை குழுவில்ஆராயப்பட்டுதயாரிக்கப்பட்ட விடயங்களாகும். இதனை எந்த ஆளும்தரப்பு முன்னெடுத்தாலும் அதற்கு ஆதரவளித்து, அறிவை இலக்காகக்கொண்ட கல்விக் ☞ 7

காலைக்கதிர் Kalaikkathir

# மகிந்தவை மெதமுல்லவுக்கு அனுப்பவே புதிய சட்டமூலம்

## ராஜபக்சவின் செயலாளர் கருத்து

அரசியல்கலாசாரத்தைபுறக்கணித்துவிட்டு முன்னாள் அரசுத் தலைவர்களைப் பழிவாங்கும் நோக்கத்தில் ஆளும்தரப்பு முன்னாள் அரசுத் தலைவர்களின் உரித்தை இரத்துச் செய்யும் சட்டமூலத்தை கொண்டு வந்துள்ளது. முன்னாள் அரசுத் தலைவர் மஹிந்த ராஜபக்சவை மாத்திரம் இலக்காக் கொண்டு அவரை கொழும்பில் இருந்து வெளியேற்றி மெதமுல்லவுக்கு கொண்டு செல்வதற்காகவே இந்த சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. மஹிந்தவை மெதமுல்லவுக்கு அனுப்பி வைக்கும் சட்டமூலம் என்று பெயர் வைத்திருக்கலாம் என முன்னாள் அரசுத் தலைவர் மஹிந்த ராஜபக்சவின் ஊடக பேச்சாளராக சட்டத்தரணி மனோஜ் கமகே தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பணிமனையில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடுகள் அமைச்சு நேற்று (நேற்று முன்தினம்) 1896 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க அரசுத் தலைவர்களின் உரித்துச் சட்டத்தை இரத்துச் செய்யும் சட்டமூலத்தை வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரித்திருந்தது. முன்னாள் அரசுத் தலைவர்களின் சிறப்பு சலுகைகளை இரத்துச்செய்வதை இந்த சட்டமூலம் பிரதான நோக்கமாகக் கொண்டுள்ளது..

நாட்டு மக்கள் பல பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ள நிலையில் முன்னாள் அரசுத் தலைவர்களின் சிறப்புரிமைகளை இரத்துச் செய்வதற்கு இந்த ஆளும்தரப்பு விசேட அவதானம் செலுத்தியுள்ளமை கவலைக்குரியது. முன்னாள் அரசுத் தலைவர்கள் மற்றும் பிரதமர்களுக்கு உரிய சிறப்புரிமைகளை வழங்குவது அரசியல் கலாச்சாரத்தின் ஒருபகுதியாகும். உலக நாடுகளும் இந்த வழக்கினை பின்பற்றுகிறது.

அரசியல்கலாசாரத்தைபுறக்கணித்துவிட்டு முன்னாள்அரசுத்தலைவர்களைபழிவாங்கும் நோக்கத்தில்ஆளும்தரப்புஇந்தசட்டமூலத்தை கொண்டு வந்துள்ளது.முன்னாள் அரசுத் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவை மாத்திரம் இலக்காக் கொண்டு அவரை கொழும்பில் இருந்து வெளியேற்றி மெதமுல்லவுக்கு கொண்டுசெல்வதற்காகவே இந்த சட்டமூலம் கொண்டு வரப்பட்டுள்ளது.மஹிந்தவை மெதமுல்லவுக்கு அனுப்பி வைக்கும் சட்டமூலம் என்று பெயர் வைத்திருக்கலாம்.

மஹிந்த ராஜபக்சவுக்கு எதிராக செயற்பட்டால் அது அரசாங்கத்துக்கு எதிரானதாக அமையும்.ராஜபக்சர்களுக்கு எதிராக செயற்பட்டதால் தான் நல்லாட்சி ஆளும்தரப்பு நெருக்கடிக்குள்ளானது.இந்த ஆளும்தரப்பும் அவ்வாறு செயற்பட்டால் பெரும் நெருக்கடிகளை ஆட்சியாளர்கள் எதிர்கொள்ள நேரிடும் என்றார்.

---

## இனி இது .....

புதைகுழி விவகாரம், செம்டெம்பரில் ஜெனிவாவில் நடக்கவிருக்கும் மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடர், அதற்கு முன்பாக அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைமையில் கடிதம் ஒன்றை அனுப்பமேற்கொள்ளப்படும்முயற்சி என்பன உள்ளிட்ட பல விடயங்கள் குறித்தும் இந்தக் கூ-ட்டத்தில் அலசப்படவுள்ளது.

உள்ளூராட்சிசபைத்தேர்தலுக்குப்பின்னர் கட்சியின் அரசியல் குழு தற்போதுதான் நேரில் கூடவுள்ளதால் அது தொடர்பான விடயங்களும்அதிகளவில்ஆராயப்படும்என்று தெரிகிறது. உள்ளூராட்சி சபைகளில் கட்சியின் கட்டுப்பாடுகளை மீறி நடந்தவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படவேண்டியுள்ள ஒழுக்காற்று நடவடிக்கைகள் குறித்தும் இந்தக் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளதாகத் தெரிகின்றது.

இதற்கிடையில், இனப்படுகொலை விவகாரத்தை முன்னுக்குப் போடுவதா இல்லையேல் பின்னுக்குப் போடுவதா என்பதில்கடும்குழப்பங்களுக்குஉள்ளாக்கியும் விமர்சனங்களுக்கு உள்ளாகியும் உள்ள அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் தலைமையிலானகூட்டுஉருவாக்கியிருக்கும் கடிதத்தில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியும் கையெழுத்திடவேண்டும் என்று கொழும்பில் நடந்த நிகழ்வொன்றில் சந்தித்த சுமந்திரன் தலைமையிலான சுமந்திரன் அணி நாடாளுமன்றக் குழுவினரிடம் பேசியிருக்கின்றனர் நாடாளுமன்ற கஜேந்திரகுமாரும் கஜேந்திரனும்.

கடிதத்தைத் தாங்கள் ஏற்கனவே தயாரித்துவிட்டனர் என்றும் அதில் தமிழ் அரசுக் கட்சி கையெழுத்திடவேண்டும் என்றும் அவர்கள் கேட்டிருக்கின்றனர். நாடாளுமன்றத்தில்அதிகதமிழ்ஆசனங்களைக் கொண்டிருக்கூடிய ஒரே கட்சி தமிழ் அரசுக் கட்சிதான் என்பதால் அந்தக் கட்சியின் கையெழுத்தின்றி அனுப்பப்படும் தமது கடிதம் ஐ.நாவில் செல்லாக் காசு என்பது நன்கு தெரிந்திருந்தபோதும் தாங்கள் இழுத்த இழுப்புக்கு தமிழ் அரசுக் கட்சியினர் தப்புத்தாளம் போடவேண்டும் என்பதாகவே கஜேந்திரகுமார் அணியினரின் பேச்சு இருந்ததாக அது குறித்து ஒருவர் தெரிவித்தார். இந்தச் சந்திப்பில் கடிதத்தில் கையெழுத்து வைப்பதற்கானசம்மதத்தைதமிழ்அரசுக்கட்சி தெரிவிக்கவில்லை. கடிதத்தை முழுமையாகப் பார்த்த பின்னர் அது -குறித்துப் பேசலாம் என்று கூறி ஒதுங்கிக் கொண்டதாகவே தெரிகிறது.

இன்றைய அரசியல்குழுக் கூட்டத்தில் இந்தக் கடிதம் குறித்தும் விவாதிக்கப்படும் என்று தெரிகிறது. கடிதத்தில் தமிழ் அரசுக் கட்சி கோரும் திருத்தங்களைச் செய்வதற்கு இணங்காதபட்சத்தில் அதில் கையெழுத்திடுவதில்லை என்கிற முடிவுக்கே கட்சி வரும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால், தமிழ் அரசுக் கட்சியில் இருந்தாலும் சுமந்திரனுக்கு எதிராக கஜேந்திரகுமாரைத் தமது தலைவராக வரிந்துகொள்ளத் தயார் என்று நிற்கும் ஓரிவர் தனித்து அந்தக் கடிதத்தில் கையெழுத்திட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை..

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## 6 மாதங்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேயபால தெரிவித்தார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சில் வியாழக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசகட்டமைப்பில்நாம்உயர்ந்த இடத்தில் இல்லை. அரச கட்டமைப்பு தொடர்பில் மக்கள் நம்பிக்கையை இழந்துள்ளனர். அவ்வாறான பல மோசமான விடயங்கள் அண்மைக் காலமாக நடைபெற்றன. சுயாதீனமாக செயற்படக்கூடியவர்களை நியமிப்பதே எமது அரசின் நோக்கமாகும். இதன் ஊடாகச் சிறந்த அரச கட்டமைப்பை உருவாக்க முடியும்.

இந்த அரச துறையில் ஊழல்வாதிகள் பலர் இருக்கின்றனர். ஒருசிலரின் நடவடிக்கையால் முழு அரச கட்டமைப்பும் பாதிக்கப்படுகிறது. நாம் அமைச்சை பொறுப்பேற்றதன் பின்னர் இறுக்கமான பல தீர்மானங்களை எடுத்தோம். கடினமான நடவடிக்கைகளை மேற்கொண்டோம். குறுகிய காலப்பகுதிக்குள் பொலிஸ் திணைக்களத்திலிருந்து மாத்திரம் கடந்த 6 மாதங்களில் 300 இற்கும் மேற்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். கடந்த வருடத்தில் 200 பொலிஸ் உத்தியோகத்தர்கள் வெளியேற்றப்பட்டனர். தற்போது 300 பொலிஸ் உத்தியோகத்தர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

நாட்டின் பிரதான நிறுவனங்களான பொலிஸ் திணைக்களம் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் மற்றும் சிறைச்சாலை திணைக்களம் என்பவற்றில் பதில்தலைவர்களே இருக்கின்றனர். குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் கட்டுப்பாளர் நாயகம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். பொலிஸ் மா அதிபர் சிறையில் இருந்து பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். அவருக்கு எதிராக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகமும் சிறையில்அடைக்கப்பட்டுபின்னர்பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். இதனைபார்க்கும்போது பிரதான நிறுவனங்களில் பதில் தலைவர்களே இருக்கிறார்கள். ஏன் அவ்வாறு நடைபெறுகிறது. அரச பணியைத் தொழிலாகக் கருதிச் செயற்படுவதன் காரணமாகவே இந்த பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

ஆளும்தரப்பு என்ற வகையில் தராதரம் பாராமல்எவராகஇருந்தாலும்சட்டவிரோதமாக செயற்படும்அனைவருக்கும்எதிராகசட்டத்தை கடுமையாக நடைமுறைப்படுத்துவோம். அவர் சிறைச்சாலைகள் ஆணையாளரா அல்லது பொலிஸ் மா அதிபரா அல்லது சிறிய வர்த்தகர் ஒருவரா என்பது முக்கியம் இல்லை.

அவர்சட்டவிரோதமானசெயற்பாடொன்றை மேற்கொண்டால் அவருக்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்துவோம். நாட்டில் சட்டவாட்சியை உறுதிப்படுத்த வேண்டும். நாட்டில் உரிய முறையில் சட்டத்தை நடைமுறைப்படுத்தவில்லை என்றால் அந்த சமூகத்தை வெற்றிகரமாக முன்னோக்கி அழைத்து செல்ல முடியாது என்றார்.

## இலங்கையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உற்பத்தி தேயிலைத் தொழில் ஆகும். ஆனால், பனை மரங்களை நாங்கள் சரியாகப் பயன்படுத்துவோமானால் தேயிலையைவிட அதிகளவில் அந்நியச் செலாவணியை பனை மூலமாகப் பெறமுடியும்.

அவ்வாறான வளத்தை நாம் ஏன் இன்று கண்டுகொள்ளாமல் இருக்கின்றோம். இதுநாள் வரைக்கும் இருந்தவர்கள் இதனை ஏன் உதாசீனப்படுத்தியுள்ளார்கள். இதுநாள் வரைக்கும் இருந்தவர்கள் ஏன் இதனைச் சரியான முறையில் இயக்கவில்லை.

பனை தொடர்பான ஆய்வறிக்கைகள் பல கதைகளைச் சொல்கின்றன. எங்களிடம் ஒரு கோடியே 50 லட்சம் பனை மரங்கள் ஆகக் குறைந்தது இருக்கின்றன. ஒரு மரத்திலிருந்து மாதாந்தம் 700 முதல் 800 ரூபா வரையில் பெறமுடியும். அப்படியானால் ஒரு கோடியே 50 லட்சம் பனைகளில் இருந்து எவ்வளவு வருமானம் பெறமுடியும் என்று பாருங்கள். பனையிலிருந்து நூற்றுக்கும் அதிகமான உற்பத்திகள் கிடைக்கின்றன. அப்படியிருக்கும்போது இதனை ஏன் கண்டுகொள்ளவில்லை.

நாம் அதிகாரத்திற்கு வந்த பின்னர் இந்தப் பனைத்துறையைஉயர்த்தவேண்டும்என்று நாம் தீர்மானித்தோம். அதற்காகத் தேடிப் பார்க்கின்றபோது பனை சார் தொழிலில் ஈடுபடுகின்றவர்கள், உற்பத்தியாளர்கள், அதிகாரிகளின் செயற்பாடுகள் திருப்திகரமாக இல்லை. நம்முடைய ஆட்கள் சரியான முறையில் இயங்கி இருந்திருந்தால் பனை மரத்தின் மூலமாக எமக்குக் கிடைக்கின்ற வருமானமும் தமிழர்களின் வாழ்வும் உயர்ந்திருக்கும். ஆனால் அதையெல்லாம் துஸ்பிரயோகம் செய்துவிட்டார்கள்.

அதனால், துறைசார் அமைச்சர், பிரதி அமைச்சர், சபையின் செயலாளர் ஆகியோர் உள்ளிட்ட குழுவினர் பல நாட்கள் கூட்டம் போட்டு இது தொடர்பில் விவாதித்தோம். அதன்படி இந்தத் துறையை புதிய திசை நோக்கிக் கொண்டு செல்லவேண்டும் என்று தீர்மானித்தோம். அதற்காக பல நடவடிக்கைகளையும் எடுத்துள்ளோம். அதில் சாதக பாதகங்கள், வெற்றி தோல்வி என்பன ஏற்பட்டன. இருந்தாலும், இந்தப் பனைத் துறையை இதைவிட உயர்வான இடத்திற்குக் கொண்டு வருவது என்று முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் காலங்களில் புதிய நிர்வாகம், புதிய தலைமைத்துவம், சிறப்பாக இயங்கக்கூடிய தலைமைத்துவத்தைப் பெற்றுக்கொடுப்பதற்கு ஏதுவான நடவடிக்கையை நாம் எடுக்கவுள்ளோம். 2026இல் இதற்காக வரவு செலவுத் திட்டத்தில் கூடுதல் நிதியை ஒதுக்குவதற்கும் அதன் மூலம் இதனை ஒரு புதிய திசை நோக்கிக் கொண்டு செல்வதற்கும் நாம் முடிவுகளை எடுத்துள்ளோம் - என்றார்.

## செம்மணியில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சான்றுப் பொருட்களை அடையாளம் காட்டுவது செம்மணியில் புதைக்கப் பட்டவர்களை அடையாளம் காண்பதற்கு மிக முக்கியமானது எனவும், இந்த வழக்கு விசாரணைகளை அடுத்த கட்டம் நோக்கி எடுத்துச்செல்வதற்கு அவசியமானது என்றும் சட்ட வல்லுநர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

## மேலும் 4 ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அகழ்வாய்வுத்தளம் இல - 01' மற்றும் 'தடயவியல் அகழ்வாய்வுத்தளம் இல - 02' என நீதிமன்றினால் அடையாளப்படுத்தப்பட்ட மனித புதைகுழிகளில் அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறன.

இரண்டாம் கட்ட பணிகளுக்காக 45 நாட்கள் நீதிமன்றினால் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், நேற்று 27ஆவது நாளாகவம் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இரண்டாம் கட்டத்தின் இரண்டாம் பகுதி கடந்த 12 நாளாக நேற்று இடம்பெற்றது. செம்மணி மனித புதைகுழியில் அகழ்வு பணிகள் இதுவரையில் கட்டம் கட்டமாக 36 நாட்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நேற்று அகழ்ந்து எடுக்கப்பட்ட 7 எலும்பு கூட்டு தொகுதிகளுடனுமாக 112 எலும்புக் கூட்டுத் தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. இதுவரையில் 122 எலும்பு கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

## ஆவணி 6,7 ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றிணைந்து, ஆவணி 6 மற்றும் 7 (06-08-2025 மற்றும் 07-08-2025) ஆகிய திகதிகளில்விழிப்புணர்வுபோராட்டம்ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் போராட்டக் குழுவினர் இதனைத் தெரிவித்தனர். அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

மன்னார் மாவட்டத்தின் இயற்கை வளங்களில் ஒன்றாக மணல் உள்ளது. இந்த மணல், இல்மனைட் கனிமத்தைக் கொண்டிருப்பதால், உலகளவில் பெரும் கேள்வி உள்ளது. கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக, ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த பல்தேசிய நிறுவனம் ஒன்று இல்மனைட் மணலை அகழ முயற்சித்து வருகிறது. இதற்கான அனுமதிகள் இழுபறியில் இருந்த போதிலும், தற்போதைய ஆளும்தரப்பின் கீழ் அவை வழங்கப்படுவதற்கான சூழல் உருவாகியுள்ளது. குறிப்பாக, ஆஸ்திரேலிய நிறுவனம் அகழ்வுக்கான சூழலியல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை ஒன்றை சுற்றுச்சூழல் அதிகார சபையிடம் சமர்ப்பித்திருந்தது. இதற்கு சுற்றுச்சூழல் அதிகார சபை சாதகமான அறிக்கையை வழங்கியுள்ளது.

இதனைத் தொடர்ந்து, பல்தேசிய நிறுவனங்களுக்கு மணல் அகழ்வதற்கான அனுமதி வழங்கப்படுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இவ்வாறு இல்மனைட் மணல் அகழப்பட்டால், அடுத்த 10 ஆண்டுகளுக்குள் மன்னார் மாவட்டத்தின் வாழ்நிலங்களுக்குள் கடல் நீர் உட்புகுந்து, மக்களின் வாழ்விடங்களையும் பூர்வீக நிலங்களையும் அழித்துவிடும் அபாயம் உள்ளது. இந்த அழிவைத் தடுக்கவும், எமது பூர்வீகநிலங்களையும்மக்களின்இருப்பையும் பாதுகாக்கவும், 'கருநிலம் பாதுகாப்பு' என்ற கருப்பொருளுடன் மக்களை விழிப்புணர்வு செய்யும் போராட்டத்தை முன்னெடுக்க இளையோர் வீதிக்கு இறங்கவுள்ளோம்.

இப்போராட்டத்தில் விழிப்புணர்வு நாடகங்கள், கையெழுத்து இயக்கம் உள்ளிட்ட செயற்பாடுகள் முதன்மை பெறவுள்ளன. மேலும், போராட்டத்தின் இறுதியில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபருக்கு மனு ஒன்று கையளிக்கப்படவுள்ளது. இப்போராட்டத்திற்கு மன்னார் மாவட்ட மக்கள், குறிப்பாக இளையோர், முழுமையான ஒத்துழைப்பு வழங்கவேண்டுமெனஅழைப்புவிடுக்கிறோம் - என்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# பட்டப்பகலில் பயணிகள் பேருந்திலிருந்து வாள் முனையில் நபரை கடத்தித் தாக்குதல்

## போதைப் பொருள் கடத்தல் கும்பல் அட்டகாசம்



மன்னார் நகரிலிருந்து தலைமன்னார் நோக்கிச் சென்றுகொண்டிருந்த பேருந்தை மறித்து அதிலிருந்த நபர் ஒருவரை வாளுன் வந்த குழு ஒன்று பட்டப்பகலில் கடத்திச் சென்று தாக்கிக் காயப்படுத்தியுள்ளது. பஸ்ஸில் இருந்த பயணிகள் பார்த்திருக்க இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளமை மன்னாரில் பெரும் அச்சத்தையும் பதற்றத்தையும் பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

மன்னார் நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கு விசாரணைக்காக சென்று மீண்டும் தனியார் பேருந்தில் வீடு திரும்பிய நபர் ஒருவரே இப்படிக் கடத்தித்தாக்கப்பட்டுள்ளார். வியாழக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. பேருந்தில் இருந்த ஒருவர் இந்தச் சம்பவத்தை காணொலியாகப் பதிவு செய்து சமூக ஊடகங்களில் வெளியிட்டதைத் தொடர்ந்து அது 'வைரல்' ஆகப் பரவி வருகின்றது.

தலை மன்னார் பிரதான வீதி,காட்டாஸ்பத்திரி பகுதியில் பேருந்தை வழிமறித்த ஒரு குழுவினர் வாளுடன் அதற்குள் ஏறி பயணிகளை அச்சுறுத்தி விட்டு, அந்த நபரைத் தாக்கி, பேருந்தில் இருந்து குண்டுக் கட்டாகத் தூக்கி இறக்கி மோட்டார் சைக்கிளில் கடத்தி சென்றனர். பின்னர் அந்த நபரை நடுக்குடா காட்டுப்பகுதிக்குள் வைத்துக் கடுமையாகத் தாக்கிவிட்டு ஓடித் தப்பியுள்ளனர்.

காட்டாஸ்பத்திரி கிராமத்தில் நீண்ட காலமாக போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டு வருகின்ற குழுவினரே இந்த நபரைக் கடத்தினர் எனக் கூறப்படுகின்றது காட்டாஸ்பத்திரி கிராமத்தில் போதைப்பொருள் வர்த்தகம் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றபோதும் பேசாலை பொலிஸார் அசமந்த போக்குடன் நடந்து கொள்வதே இத்தகைய சம்பவங்களுக்கு வழிகோலியுள்ளது எனப் பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

# தொடருந்தின் கழிப்பறையில் பெண் சிசுவின் சடலம் மீட்பு

மாளிகாவத்தை தொடருந்து நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்த தொடருந்து எண் 8346-இன் மூன்றாம் வகுப்பு பெட்டியின் கழிப்பறையில் நேற்று பெண் சிசு ஒன்றின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த சிசுவின் வயது சுமார் மூன்று நாட்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இன்று காலை புத்தளத்திலிருந்து கல்கிசைக்கு வந்த தொடருந்துஎண் 8346, பயணத்தை முடித்து மாளிகாவத்தை தொடருந்து நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்தது.

தொடருந்தைச் சுத்தம் செய்யச் சென்ற தொழிலாளர்கள் குழு, மூன்றாம் வகுப்பு பெட்டியிலிருந்து கடுமையான துர்நாற்றம் வீசுவதைக் கவனித்து, சோதனை செய்தபோது, கழிப்பறையில் ஒரு பையில் சுற்றப்பட்டிருந்த பெண் சிசுவின் சடலத்தைக் கண்டு அதிர்ச்சியடைந்தனர்.

தொழிலாளர்கள் உடனடியாக தெமட்டகொட பொலிஸாருக்கு தகவல் அளித்தனர்.

பொலிஸார் ஆரம்பகட்ட விசாரணைகளை மேற்கொண்டதில், சிசுவின் வயது மூன்று நாட்கள் எனவும், தொப்புள் கொடியின் ஒரு பகுதி இன்னும் இருப்பதையும் கண்டறிந்தனர். இதனால், இந்தப் பிரசவம் வைத்தியசாலையில் நடைபெறவில்லை என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

சிசு வைக்கப்பட்டிருந்த பை, தீர்வையற்ற கடைகளில் (DUTY FREE) வாங்கப்பட்ட பை என பொலிஸாரால் அடையாளம் காணப்பட்டுள்ளது.

பையில் உள்ள கியூஆர் (QR) குறியீட்டை ஸ்கேன் செய்து, அது துபாயைச் சேர்ந்தது என்பதை பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர்.

அளுத்கம நீதிவான் நேற்று மதியம் சம்பவ இடத்திற்குச் சென்று, சிசுவின் உடலையும் தொடருந்துப் பெட்டியையும் ஆய்வு செய்தார்.

பின்னர், உடல் பிரேத பரிசோதனைக்காக எடுத்துச் செல்லப்பட்டது. விசாரணைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.



## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# ஊழலுக்கு எதிரான போராட்டம் பரந்துபட்டமைய வேண்டும்

இலங்கையில் கடந்த ஆறு மாதங்களில் மட்டுமே, லஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளுக்காக 300 காவல்துறையினர் பணிநீக்கம்செய்யப்பட்டுள்ளனர். இதுஆளும்தரப்பேசுட்டிக்காட்டிய தகவல். கடந்த ஆண்டும் இதேபோன்று 200 பொலிஸாருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இத்தகவல்களே நாம் எதிர்நோக்கும் ஊழல் நிலைமையின் ஆழத்தையும், அதனை ஒழிக்க மேற்கொள்ளப்படும் முயற்சிகளின் தீவிரத்தையும் வெளிப்படுத்துகின்றன.

ஒரு நாட்டின் சட்டம், ஒழுங்கு, சமூக நம்பிக்கை ஆகியவற்றைப் பாதுகாக்கும் காவல்துறையினர் தாங்களே லஞ்சம் வாங்கும் நிலைக்குத் தாழ்ந்துவிட்டால், பொதுமக்களுக்கு என்ன நம்பிக்கை இருக்க முடியும்? இதை யோசிக்கும்போது, இந்தப் பணிநீக்கநடவடிக்கைகள்பெரிதும்பாராட்டப்படவேண்டியவையே. ஆனால் பாராட்டுவதோடு மட்டும் நிறுத்திக்கொள்ள முடியாது. இந்த நிலைமைக்கு காரணமான காரணங்களையும் தேட வேண்டியிருக்கிறது.

காவல்துறையினரிடம் மட்டும் ஊழல் இருக்கிறது என்ற பாவனையை ஏற்படுத்தும் வகையில், இந்தத் தகவல்கள் வரவேற்பு பெறக்கூடியதாக இருந்தாலும், உண்மையான நிலைமை வேறுபட்டதாக உள்ளது. அரச நிறுவனங்களில் மொத்தமாகவே லஞ்சம், ஊழல், அதிகாரத் துஸ்பிரயோகம் என்பன கட்டுப்பாடின்றி தலைவிரித்தாடுகின்றன. கல்வி துறை, சுகாதாரத் துறை, வரி துறை, விதிமுறை வழங்கும் ஆணையங்கள், உள்ளூராட்சி சபைகள் என அனைத்துத் துறைகளிலும், ஊழல் பெருக்கெடுத்து வளர்ந்துவருவது உண்மை. இந்த வகை ஊழல்களில் சில நேரங்களில் அதிகாரிகள் மட்டுமின்றி, அரசியல்வாதிகளும் நேரடியாக அல்லது மறைமுகமாகச் சேர்ந்துகொள்கின்றனர். இது ஒரு மிகச் சிக்கலான சூழ்நிலையை உருவாக்குகிறது.

இந்தச் சூழலில், காவல்துறையினருக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை ஓர் ஆரம்பப் படியாக மட்டுமே பார்க்கப்படவேண்டும்.இதில்ஆளும்தரப்புஇருமனப்பான்மையின்றி, ஒரே கண்ணோட்டத்தில் அனைத்துத் துறைகளிலும் உரிய விசாரணை, நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். ஊழலை ஒழிப்பது என்பது சிலர் மீது நடவடிக்கை எடுப்பது மட்டுமல்ல. அது, முழு அமைப்பின் நோயைக் கண்டறிந்து, அதற்கான சிகிச்சையை அளிப்பதற்கான பொறுப்புடன் மேற்கொள்ளப்படவேண்டிய பணியாக இருக்க வேண்டும்.

இங்கே ஆளும்தரப்பின் நேர்மையான நிலைப்பாடு மிக முக்கியமானதாக இருக்கிறது. அதிகாரிகளை நீக்குவது மட்டும் போதாது. அவர்கள் மீதான குற்றச்சாட்டுகளை விசாரித்து நீதிமன்ற நடவடிக்கைகளுக்கும் உட்படுத்த வேண்டும். அவ்வாறு நடவடிக்கைகள் எடுக்கப்படும்போதுதான் அது மற்ற அதிகாரிகளுக்கும் எச்சரிக்கையாக அமையும்.

மேலும், ஊழலை ஊக்குவிக்கும் சூழ்நிலைகளைக் குறைக்கும் நோக்கிலும் ஆளும்தரப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். குறைந்த ஊதியங்களும், கடுமையான பணிச் சுமைகளும், உயர் அதிகாரிகளின் அரசியல் அனுசரணைகளும், நேர்மையற்ற பணியாளர்களை உருவாக்கக்கூடிய சூழ்நிலைகள். இவை அனைத்தும் சேர்ந்து இந்தப் பிரச்சினையை ஊக்குவிக்கின்றன.

இதனைத் தீர்க்க, பொதுமக்கள் மற்றும் ஊடகங்களின் பங்கு மிக முக்கியமாகும். தகவல் அறியும் உரிமை சட்டம் (யூவீனூ) போன்ற சட்டங்களைப் பயனுள்ளதாகப் பயன்படுத்தி, பொதுமக்கள் எங்கெல்லாம் ஊழல் நடக்கின்றதோ அதை வெளிக்கொணரவேண்டும். ஊடகங்களும்இந்தவிவகாரங்களில் வெளிப்படையாகக் குரல் கொடுக்க வேண்டும்.

முடிவில், இலங்கை ஒரு ஊழல் இல்லாத சமுதாயத்தை நோக்கி செல்லவேண்டுமானால், ஆளும்தரப்பின் நடவடிக்கைகள் நிலைத்து நிற்கும் மாற்றத்தை ஏற்படுத்தும் வகையிலும், அரசமைப்புச் சட்டத் திருத்தங்களின் வழியாக ஒழுக்கக் கட்டுப்பாடுகளை உறுதிசெய்யும் நோக்கிலும் அமைய வேண்டும். அது மட்டுமே இலங்கையை நல்லநிலை நோக்கி இட்டுசெல்லும் உண்மையான வழி.

# சட்டமூலம் நிறைவேறியதும் மகிந்த அரச இல்லத்திலிருந்து விலகுவார்

## நாமல் ராஜபக்ச தெரிவிப்பு

முன்னாள் அரசுத் தலைவர்களின் சிறப்புரிமைகளை இரத்துச் செய்யும் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டவுடன் முன்னாள் அரசுத் தலைவர் மஹிந்த ராஜபக்ச அரச உத்தியோகபூர்வ இல்லத்தில் இருந்து வெளியேறுவார். அரசுத் தலைவர் சட்டமூலங்களை கொண்டு வரும்போது தனது எதிர்காலம் குறித்தும் கவனம் செலுத்தவேண்டும், ஏனெனில் எதுவும் நிலையற்றது என்று ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும்,நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற தொகுதி அமைப்பாளர்களுடனான சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் அரசுத் தலைவர்களின் சிறப்புரிமைகளை இரத்துச் செய்யும் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டவுடன் முன்னாள் அரசுத்தலைவர் மஹிந்த ராஜபக்ச அரச உத்தியோகபூர்வ இல்லத்தில் இருந்து வெளியேறுவார். இவற்றை நாங்கள் கேட்டு வாங்கவில்லை. அரசமைப்பினால் அவை எமக்குக் கிடைக்கப்பெற்றது.

முன்னாள் அரசுத்தலைவர்கள் தொடர்பில் தீர்மானங்களை எடுக்கும் தற்போதைய அரசுத் தலைவர் தனது எதிர்காலம் குறித்தும் அவதானம்செலுத்தவேண்டும். இந்தநாட்டில் முன்னாள் அரசுத் தலைவர்களுக்கு இன்றும் பல்வேறு அச்சுறுத்தல்கள் காணப்படுகின்றன.

நாங்கள் வெறுப்புடன் அரசியல் செய்யவில்லை. எனக்கு எதிராக பெரும்பாலான வழக்குகள் நல்லாட்சிக் காலத்தில்தான் தாக்கல் செய்யப்பட்டன. இருப்பினும் நாங்கள் முன்னாள் அரசுத் தலைவர்களான ரணில் விக்கிரமசிங்க மற்றும் மைத்திரிபால சிறிசேனவுடன் ஒன்றிணைந்து அரசியல் செய்தோம். அரசியலை நாங்கள் வெறுப்புடன் பார்க்கவில்லை.

அரசுத் தலைவர் மாலைத்தீவுக்கு அரச பயணத்துக்காக சென்றார். நான் எனது தனிப்பட்ட தேவைக்காக சென்றேன். இருவரும்ஒரேவிமானத்தில்தான்சென்றோம். இதுவொன்றும் பெரிய விடயமல்ல, அரசியல் கட்சிகள் வேறுபட்டதாக இருக்கலாம். இருப்பினும் அனைவரும் இலங்கையர்களே.

விடுதலை புலிகள் அமைப்பு பயங்கரவாத செயற்பாட்டுடன் இராச்சியத்தை பலவீனப்படுத்த முயற்சித்தது. அந்த முயற்சி தோற்கடிக்கப்பட்டது. ஆனால் இந்த ஆளும்தரப்பு அதிகாரத்துக்கு வந்து இராச்சியத்தை பலவீனப்படுத்தும் வகையில் செயற்படுகிறது. அரச அதிகாரிகள் சுயாதீனமான முறையில் செயற்பட முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது - என்றார்.

# வருமான வரி செலுத்தாததற்கு எதிராக பியுமி ஹங்சமாலிக்கு எதிராக வழக்கு

## விரைவில் தொடரப்படும் என்று அறிவிப்பு

289 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான வருமானவரியைச்செலுத்தாமை தொடர்பில் நடிகையும் பிரபல மொடல் அழகியுமான பியுமி ஹங்சமாலிக்கு எதிராக கொழும்பு மேல்நீதிமன்றத்தில்வழக்கு தொடரவுள்ளதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் கொழும்பு நீதவான் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளது.

வரிச் சட்டத்தின் விரிவிதானங்களுக்கு அமைய கடந்த 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுக்கான செலுத்தாது விடப்பட்ட 289 மில்லியன் ரூபா தொடர்பில் பியுமி ஹங்சமாலிக்கு எதிராக இந்த வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இதனிடையே பிரபல தொழிலதிபர் விரஞ்சித் தாம்புகலவுக்கும் எதிராக குறித்த இரு வருடங்களுக்கான

வருமான வரியை செலுத்தாமை தொடர்பில்வழக்குதாக்கல்செய்யவுள்ளதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் நீதிமன்றத்துக்கு அறிவித்தது.

வருமான வரி குற்றங்கள் தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்கு அமைய அதன் முன்னேற்ற அறிக்கைகள் தொடர்பிலானபரிசீலனைகொழும்புமேலதிக நீதவான் பஷன் அமரசேன முன்னிலையில் நேற்றுமுன்தினம் அழைக்கப்பட்டது.

இதன்போது உள்நாட்டு இறைவரித்திணைக்களத்தின் சார்பில் மன்றில் ஆஜரான சட்டத்தரணி தினேஷ் பெரேரா மன்றில் விடயங்களை முன்வைத்து வருமானவரியை செலுத்தாமை தொடர்பில் நடிகையும் பிரபல மொடல் அழகியுமான பியுமி ஹங்சமாலி மற்றும் அவ்ரா லங்கா நிறுவனத்தின்பணிப்பாளர்விரஞ்சித்தாம்புகல ஆகியோருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்கு தொடரவுள்ளதாகவும் அதற்கான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

# அமெரிக்கா விதித்துள்ள வரியை மேலும் 5% குறைக்கவேண்டும்

## எதிர்க் கட்சித் தலைவர் சஜித் வலியுறுத்து

அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யும் பொருட்களுக்காகஅமெரிக்காவின்வரி20வீதமாககுறைத்திருப்பது குறித்து மகிழ்ச்சியடைவதுடன் அதனை 15 வீதத்துக்கும்குறைவான இலக்காக வைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் தீர்வை வரி வீதம் 20வீதம் வரை குறைத்திருப்பதாக அமெரிக்கா அறிவித்துள்ளமை தொடர்பில் அவர் தனது எக்ஸ் தளத்தில் இவ்வாறு பதிவிட்டுள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை பொருட்களுக்கான தீர்வை வரியை ஐக்கிய அமெரிக்கா 20 வீதமாக குறைத்திருப்பதில் மகிழ்ச்சியடைக்கிறோம். இந்தியாவுக்கு 25 வீதம் செலுத்தியுள்ள நிலையில் எங்களை, வியட்நாம் மற்றும் பங்களாதேஷுடன் இணைத்திருக்கிறது.

எமது ஏற்றுமதியாளர்களுக்கு உண்மையான ஊக்குவிப்பை வழங்குவதற்காக நாம்15 வீதத்துக்கும் குறைவான இலக்கை வைத்துக்கொள்ள வேண்டும். அதுதொடர்பில்பேச்சுவார்த்தைநடத்துவதற்குஎமக்கு வர்த்தக பொருளாதார வல்லுநர்கள் குழுவொன்று இருக்கவேண்டும்.


வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்
மருதம் பசுமை நகர்
Marutham Green City
நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km
உள்ளக வசதிகள்
நூலகம்
நீச்சல் தடாகம்
உணவகம்
சிறுவர் பூங்கா
விளையாட்டுத்திடல்
மீன்பிடி குளம்
A - 2 பரப்பு மேட்டுக்காணியுடன்
2 பரப்பு வயல்க்காணி
B - 2 பரப்பு மேட்டுக்காணியும்
2 பரப்பு வயல்க்காணியும் (தனித்தனியாக)
C - 2 பரப்பு மேட்டுக்காணி
பிரதான வீதியுடன்
0777 43 55 57


JDr
JDR CARE HOME
&
MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான
பூரண வசதிகளுடனான
பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane,
Jaffna


புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
KNOWLEDGE IS POWER
January 25
FREE
February 5
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT
தரம் 6
தொடக்கம்
தரம் 11
வரை


Study
MBBS
in China
SLMC APPROVED
Dalian Medical
University
YOUR PATH TO WORLD CLASS MBBS
JDR HEALTH CARE PVT(LTD)
SEPTEMBER 2025
ADMISSION
OPEN
CONTACT US
FOR ADMISSION
0701348384

காலைக்கதிர் Kalaikkathir

## அமெரிக்க வரிக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுகலைமேம்படுத்தல்மற்றும்தொழில்நுட்ப பயன்பாட்டுன் உற்பத்தி செலவுகளை குறைப்பதற்கு பரந்தளவிலான பேச்சுக்களில் ஈடுபடுவது அவசியமாக உணரப்பட்டுள்ளது. இந்த வரி அமுலாக்கம் தொடர்பில் தொழில் முனைவோருடன் அமைச்சுமட்டத்தில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் நிதியமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்.

அமெரிக்காவினால் இலங்கைக்கு விதிக்கப்பட்டுள்ள 20 சதவீத பரஸ்பர வரி தொடர்பில் அரச தகவல் திணைக்களத்தில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்த அவர், மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை ஏற்றுமதிகள் மீதான அமெரிக்காவின் பரஸ்பர வரி 20 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளமை நாட்டின் வர்த்தக பொருளாதாரத்தின் முன்னேற்றகரமான போக்கினை எடுத்துக்காட்டுகிறது.

கடந்த ஏப்ரல் மாதம் இலங்கைக்கு 44 சதவீத பரஸ்பர வரி விதிக்கப்பட்டதை தொடர்பில்இதனால்ஏற்படும்பாதிப்புதொடர்பில் ஆராய்வதற்கும்,தீர்வு முன்வைப்பதற்கும் அரசுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்க விசேட அவதானம் செலுத்தி துறைசார் நிபுணர்களை உள்ளடக்கிய வகையில் குழு ஒன்றை நியமித்தார்.

பிராந்திய சந்தையில் அதன் போட்டி நிலைமையைப் பேணுவதன் மூலம் இலங்கை எவ்வாறு ஏற்றுமதி துறையில் முன்னேற்றமடைய முடியும் என்பதைத் தீர்மானிப்பது முதன்மை இலக்காக இருந்தது. இலங்கையின் பண்டங்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதியாளர்களுக்கான சந்தைப் பங்கைப் பராமரிப்பதில் மட்டும் கவனம் செலுத்தப்பட்டது.

இலங்கையின் பிரதிநிதிகள் அமெரிக்க வர்த்தக பிரதிநிதிகளுடன் மேற்கொண்ட தொடர்ச்சியான இருதரப்பு பேச்சுகளின் விளைவாகவே பரஸ்பர வரி 20 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது. இது அண்மைக்காலபேச்சுக்களின் குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகும். இந்த வரி நிர்ணயத்தை அடிப்படையாகக்கொண்டுவரிவலைப்பின்னல் குறித்து தேசிய மட்டத்திலும், சர்வதேச மட்டத்திலும் பேச்சுக்களில் ஈடுபடுவோம்.

இலங்கையின்ஏற்றுமதியாளர்கள்மற்றும் தொழில்முனைவோருக்கு தொடர்ச்சியான போட்டித்தன்மையை உறுதி செய்வதற்கு இலங்கை பிரதிநிதிகளின் பிரதான இலக்காக அமைந்தது. அத்துடன் அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் பரஸ்பர நன்மைகளை ஏற்படுத்தும் வகையில் உள்நாட்டு சந்தை வாய்ப்புக்களைவிரிவாக்குவதுஆளும்தரப்பின் பிரதான நோக்கமாக இருந்தது.

அமெரிக்க பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற பேச்சு பரஸ்பர வரியை மாத்திரம் வரையறுத்ததாக அமையவில்லை. நீண்டகால வளர்ச்சியை ஆதரிக்க ஆற்றல் மற்றும் தொழிற்றுறையை அம்சங்களை விருத்தி செய்வதை மையமாகக் கொண்டு பரந்த பொருளாதாரமூலோபாயதிட்டங்களைமுன்னிறுத்தியதாகஅமைந்தது.இலங்கையின்வர்த்தக செயற்பாடுகள்வெளிப்படைத்தன்மையுடனும், பொறுப்புக்கூறும் வகையிலும் அமையும் என்பதுஅமெரிக்காவுக்குஉறுதியளிக்கப்பட்டது.

20 சதவீத வரி வலய நாடுகளின் அடிப்படையில் இலங்கைக்கு விசேட பாதிப்பை ஏற்படுத்தாது. இருப்பினும் உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு ஏற்படும் கணிசமான அளவு பாதிப்புக்கள் தொடர்பில் தேசிய தொழில் முயற்சியாளர்களுடன் அமைச்சு மட்டத்தில் பேச்சுவார்த்தையில்ஈடுபடவுள்ளோம்.வர்த்தன அணுகலை விரிவுப்படுத்தும் அதேவேளை முக்கியமாக துறைகளைப் பாதுகாப்பதிலும் உறுதியாக உள்ளோம்.

இருதரப்பு பேச்சின் போது அமெரிக்காவினால் முன்வைக்கப்பட்ட விடயங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. இவற்றால்இலங்கையின்பொருளாதாரத்துக்கு எவ்வித்திலும் பாதிப்பு ஏற்படாது. அமெரிக்க முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வதற்கான சாதகமான சூழல் ஏற்படுத்திக்கொடுக்க இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. எரிசக்தி, மூலப்பொருட்கள் மற்றும் மேம்பட்ட இயந்திரங்களின் நிகர இறக்குமதியாளராக இலங்கை தன்னை நிலைநிறுத்திக் கொண்டது.இவைபெரும்பாலும்தொழில்துறை மற்றும் நுகர்வோர் பயன்பாட்டுக்காக பெறப்பட்ட தயாரிப்புக்களாகும்.

அமெரிக்காவுக்காவுக்காக இலங்கையின் சலுகையானது இரு அரசுகளுக்கும் இடையிலானநேரடிஒப்பந்தங்களி;அல்லாமல், தனியார்விநியோகத்தர்களுடன்நடுநிலையான போட்டிஅடிப்படையிலான சந்தை அணுகலை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

தைத்த ஆடைத் தொழிற்றுறையில் தேசிய தொழில்முனைவோருக்கான சந்தை அனுகலைமேம்படுத்தல்மற்றும்தொழில்நுட்ப பயன்பாட்டுன் உற்பத்தி செலவுகளை குறைப்பதற்கு பரந்தளவிலான பேச்சில் ஈடுபடுவது அவசியமாக உணரப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்றுக்கொண்ட செயற்திட்டங்களை செயற்படுத்தவேண்டியகடப்பாடுஇலங்கைக்கு காணப்படுகிறது. வரிகளை குறைக்க முடியாது.தற்போதையநிலையில்தேவையான மாற்றங்கள் குறித்து சகல தரப்பினருடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவோம்.வர்த்தக விவகாரத்தில் பல்தரப்பு கூட்டாளர்கள் மற்றும் வணிக சமூகத்துடன் இணக்கமாக செயற்படுகிறோம்.

20 சதவீத பரஸ்பர வரி என்பது கூட்டு முயற்சியின் வெற்றியாகும்.எமது சர்வதேச கடமைகளை நிறைவேற்றுவதுடன், இலங்கையை மேலும் போட்டித்தன்மையை வாய்ந்தமாக மாற்றியமைக்க சர்வதேச மட்டத்தில் உறுதிபூண்டுள்ளோம்.

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, அரசுத் தலைவர்யின்பொருளாதாரஆலோசகர்துமிந்த ஹுலங்கமுவ,வர்த்தகஅமைச்சின்செயலாளர் விமலேந்திர ராஜா, அமெரிக்காவுக்கான இலங்கை தூதுவர் மஹிந்த சமரசிங்க உட்பட அனைத்து தரப்பினருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம் என்றார்.

## முன்னாள் அரசுத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டமூலம்நிறைவேற்றப்பட்டவுடன்முன்னாள் அரசுத் தலைவர்கள் உத்தியோகபூர்வ அரச இல்லங்களில் இருந்து வெளியேற வேண்டும்.அரச நிதியை முகாமைத்துவம் செய்வதற்காகவே சிறந்த நோக்கத்துடன் இந்தச் சட்டமூலம் கொண்டு வரப்பட்டுள்ளது என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் பிரதீபா மஹாநாமஹேவா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்த அவர், மேலும் தெரிவித்ததாவது:

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சினால் நேற்றைய தினம் (நேற்று முன்தினம்) முன்னாள் அரசுத்தலைவர்களின் உரித்துக்களை இரத்துச் செய்வது தொடர்பான சட்டமூலம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இது சிறந்ததொரு வழிமுறை என்றே குறிப்பிட வேண்டும்.

1986ஆம் ஆண்டு 4ஆம் இலக்க அரசுத் தலைவர்களின் உரித்து சட்டத்தை இரத்துச் செய்வதற்கான சட்டமூலம் வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அரசுத் தலைவர்களின்உரித்துச்சட்டத்தின்2மற்றும்3 ஆம்உறுப்புரைகள்வெளியிடப்பட்டுள்ளபுதிய சட்டமூலத்தில் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

முன்னாள் அரசுத் தலைவர்களுக்கு வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ இல்லங்கள் மற்றும் முன்னாள் அரசுத் தலைவரின் விதவையான மனைவிக்கு வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ இல்லங்கள் இந்த சட்டமூலத்தின்ஊடாகமீளப்பெறப்படவுள்ளன.

அத்துடன் முன்னாள் அரசுத் தலைவரின் விதவையான மனைவியின் செயலாளர்களுக்குவழங்கப்பட்டகொடுப்பனவு மற்றும் ஏனைய உத்தியோகபூர்வ வாகன வசதிகள் நீக்கப்படும்.

அத்துடன் முன்னாள் அரசுத் தலைவர் ஒருவர்உயிரிழந்ததன்பின்னரும்அவருக்குக் கிடைக்கப்பெற்ற ஓய்வூதியக் கொடுப்பனவு அவரது மனைவிக்கு இதுவரை காலமும் வழங்கப்பட்டிருக்குமாயின் அந்த உரித்தும் இந்த சட்டமூலத்தின் ஊடாக நீக்கப்படும்.

முன்னாள் அரசுத் தலைவர்களின் உரித்தினை இரத்துச் செய்யும் வகையில் பிரசுரிக்கப்பட்டசட்டமூலத்தைஇலங்கையர்கள் எவரும்14நாட்களுக்குள்உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்த முடியும்.

வெளியிடப்பட்டசட்டமூலம்அரசமைப்புடன் முரண்படும்என்றுஒருசிலர்குறிப்பிடுகின்றனர். 1978ஆம் ஆண்டு 36(2) பிரிவில் அரசுத் தலைவரின் சம்பளம் மற்றும் கொடுப்பனவு ஆகியன நாடாளுமன்றத்தில் தீர்மானிக்கப்பட வேண்டும் என்று தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோல் ஓய்வூதியக் கொடுப்பனவும் நாடாளுமன்றத்தால் தீர்மானிக்கப்படவேண்டும்.

புதிய சட்டமூலத்தில் எவ்விடத்திலும் முன்னாள் அரசுத் தலைவர்களின் ஓய்வூதிய கொடுப்பனவை இரத்துச் செய்வதாகக் குறிப்பிடப்படவில்லை. 1986ஆம் சட்டத்தின் பிரகாரம் வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ இல்லங்கள், வாகனங்கள் உள்ளிட்ட சிறப்பு சலுகைகள் மாத்திரமே இரத்துச் செய்யப்படவுள்ளன. ஆகவே இந்த சட்டம் 1978 ஆம் ஆண்டு 36(2) ஆம் இலக்க சட்டத்துடன் முரண்படாது.

முன்னாள் அரசுத் தலைவர்களுக்காக ஒதுக்கப்படும் நிதி திறைச்சேரிக்கு பெரும் சுமையாக இருப்பதால் அதனை முகாமைத்துவம் செய்யும் நோக்கத்தில் இந்த சட்டமூலம் கொண்டு வரப்பட்டுள்ளது.

1986 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க இரத்துச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால் முன்னாள்அரசுத்தலைவர்கள்உத்தியோகபூர்வ அரச இல்லங்களில் இருந்து உடனடியாக வெளியேற வேண்டும்.அத்துடன் அரச வாகனங்களை மீள கையளிக்க வேண்டும்.

## அமெ. வரியைக்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீதத்தை மேலும் மாற்றிக்கொண்டிருப்பதை ஐக்கிய தேசிய கட்சி ஏற்றுக்கொள்கிறது.

அதுதொடர்பான கலந்துரையாடல்களை சாதகமான முறையில் முடித்துக் கொண்டுள்ளமைதொடர்பில்ஆளும்தரப்புக்கும் கலந்துரையாடல் குழுவுக்கும் நாங்கள் பாராட்டுக்களைத் தெரிவிக்கிறோம்.

'சில வர்த்தகப் பங்காளிகள் அமெரிக்காவுடன் அர்த்தமுள்ள வர்த்தகம் மற்றும் பாதுகாப்பு உறுதிமொழிகளுக்கு இணக்கம் தெரிவித்துள்ளனர் அல்லது இணங்குவதற்குநெருக்கமாகஉள்ளனர்'என்று அரசுத் தலைவர் டொனால்ட் ட்ரம்பின் புதிய உத்தரவில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது,

அதேநேரம் 2(ஆ) பந்தியில் 'இந்த உத்தரவின் முதலாவது இணைப்பில், இனம் காணப்பட்டுள்ள சில வெளிநாட்டு வர்த்தக பங்காளிகள் ஐக்கிய அமெரிக்காவுடன் அர்த்தமுள்ள வர்த்தகம் மற்றும் பாதுகாப்பு ஒப்பந்தங்களுக்குஇணங்கியுள்ளனர். அல்லது முடிவடைய நெருங்கியுள்ளது.

அந்த ஒப்பந்தம் முடிவடையும் வரை வர்த்தக பங்காளிகளின் பொருட்கள் இந்த உத்தரவின் முதலாது இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மேலதிக தன்னார்வ வரிகளுக்கு உட்பட்டு இடம்பெறவுள்ளதுடன் அந்த ஒப்பந்தங்களின் விதிமுறைகளை நினைவுகூர்ந்து, பின்னர்நான்உத்தரவுகளை வெளியிடுவேன்'என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது,

இந்தப் பின்னணியில், அர்த்தமுள்ள வர்த்தக மற்றும் பாதுகாப்பு ஒப்பந்தங்களை எட்டுவது குறித்து தெளிவான அறிக்கையை வெளியிடுமாறு ஐக்கிய தேசியக் கட்சி ஆளும்தரப்பிடம் கோரிக்கை விடுக்கிறது - என்றுள்ளது.

## ஹர்ஷ டி சில்வா ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறைத்துள்ளதையிட்டு மகிழ்ச்சியடைகி-றோம். 20 சதவீத தீர்வை வரி என்பது அரசியல் வெற்றியல்ல, நாட்டின் வெற்றி, நாடு என்ற அடிப்படையில் முன்னோக்கிச் செல்வதற்கான ஒரு வழியாகும் என ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

இந்தியாவுடன் இலங்கை வர்த்தக தொடர்பினை வலுப்படுத்திக் கொள்ள வேண்டும். இருநாடுகளுக்கும் இடையிலான பொருளாதார கொடுக்கல் வாங்கல்களை வலுப்படுத்திக் கொண்டு, பொருளாதார பரிமாற்றத்தின் உச்சபயனை இருதரப்பும் பெற்றுக்கொள்ளவேண்டும்.இந்தியாவுடனான பொருளாதார தொடர்பு குறித்து ஆளும்தரப்பு விசேட கவனம் செலுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று வெள்ளிக்கிழமை செய்தியாளர்களிடம்இதனைனத்தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எந்த அரசியல் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தினாலும் ஸ்ரீ லங்கா என்பதை முன்னிலைப்படுத்தியே செயற்படவேண்டும் என்பதே எனது நிலைப்பாடாகும். அமெரிக்காவினால் விதிக்கப்பட்ட 44 சதவீத தீர்வை வரியானது எமது வலய நாடுகளுடன் வர்த்தக ரீதியில் போட்டியிடுவதற்கு பாரிய பாதிப்பை ஏற்படுத்தியிருந்தால் பொருளாதார ரீதியில் இலங்கை மிக மோசமான நெருக்கடிகளை எதிர்கொண்டிருக்க நேரிட்டிருக்கும்.

அமெரிக்காவினால் விதிக்கப்பட்ட பரஸ்பர தீர்வை வரி இலங்கை உட்பட சகல நாடுகளுக்கும் ஒப்பீட்டளவில் குறைக்கப்பட்டுள்ளது. இலங்கையின் ஆடை உற்பத்திகளை அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யும்போது இலங்கைக்கு இந்தியா மற்றும் வியட்நாம்ஆகியநாடுகளுடன்போட்டித்தன்மை காணப்பட்டது. இலங்கையைக் காட்டிலும் ஆசியநாடுகளுக்குபரஸ்பரதீர்வைவரியானது குறைவாக காணப்படும் பட்சத்தில் வர்த்தக பற்றாக்குறையில்நெருக்கடிஏற்படும்என்பதை நாங்கள் சுட்டிக்காட்டினோம்.

இலங்கைக்கு 20 சதவீத பரஸ்பர தீர்வை வரி தொடர்பில் ஆசிய வலய நாடுகளின் வர்த்தகபோட்டித்தன்மையுடன்ஒப்பிடுகையில் இலங்கை முன்னேற்றகரமான தன்மையில் உள்ளமை வரவேற்கத்தக்கது. வரிக் குறைப்பு தொடர்பில் நேரடியாகவும்,மறைமுகமாகவும் அமெரிக்காவுடன் பேச்சு நடத்தியவர்கள் அனைவருக்கும்நாட்டுமக்கள்கௌரவமளிக்க வேண்டும். இது கூட்டு வெற்றி என்றே குறிப்பிடவேண்டும். தீர்வை வரி விவகாரத்தில் எதிர்க்கட்சிகள் ஆளும்தரப்புக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் செயற்படவில்லை.

20 சதவீத தீர்வை வரி என்பது அரசியல் வெற்றியல்ல, நாட்டின் வெற்றி, நாடு என்ற அடிப்படையில் முன்னோக்கிச் செல்வதற்கான ஒரு வழியாகும்.நாடு என்ற அடிப்படையில் வலய நாடுகளுடன் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.மூடிய நிலையில் இருந்துக் கொண்டு தற்போது செயற்பட முடியாது.

இந்தியாவுடன் இலங்கை வர்த்தக தொடர்பினை வலுப்படுத்திக் கொள்ள வேண்டும். இந்தியாவுக்கு 25 சதவீத வரியும்,இலங்கைக்கு 20 சதவீத வரியும் விதிக்கப்பட்டுள்ளது. இதனை இலங்கை சாதகமாக பயன்படுத்திக்கொள்ளவேண்டும். இருநாடுகளுக்கும்இடையிலானபொருளாதார கொடுக்கல் வாங்கல்களை வலுப்படுத்திக் கொள்ள வேண்டும். பொருளாதார பரிமாற்றத்தின் உச்சப்பயனை இருதரப்பும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றார்.



## நல்லாட்சிக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டமைப்பை உருவாக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்எனஐக்கியதேசியகட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆஷு மாரசிங்க தெரிவித்தார்.

ஆளும்தரப்பு முன்னெடுத்துவரும் கல்வி மறுசீரமைப்பு திட்டம் தொடர்பில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆளும்தரப்பு ஆரம்பித்துள்ள கல்வி மறுசீரமைப்புநடவடிக்கை புதிய விடயமல்ல. ரணில் விக்ரமசிங்க கல்வி அமைச்சராக இருந்த காலத்தில் கல்வி மறுசீரமைப்பு தொடர்பில் வெள்ளை அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டிருந்தது. அதில் இருந்த பல சாதகமான விடயங்களும் இதில் உள்ளடங்கி இருக்கின்றன.

2015 நல்லாட்சிக் காலத்தில் முதல் தடவையாகநாடாளுமன்றத்தில்கல்விமற்றும் மனிதவள அபிவிருத்தி தொடர்பான துறைசார் மேற்பார்வை குழு அமைக்கப்பட்டது, அந்த குழுவின் தலைவராக நானே இருந்தேன். அதில் ஆளும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இணைந்து கல்வி மறுசீரமைப்பு தொடர்பில் ஆழமாகவும் விரிவாகவும் கலந்துரையாடி வந்தோம். தற்போது ஆளும்தரப்பில் இருக்கும் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, நிகால் கலப்பத்தி ஆகியோரும் அந்த குழுவில் இருந்தார்கள்.

கோட்டாபய ராஜபக்ச அரசுத் தலைவராகத் தெரிவாகி, நாடாளுமன்றத்தில் உரையாற்றிய நாளில் நாங்கள் கல்வி மறுசீரமைப்பு தொடர்பில் நாடாளுமன்ற துறைசார் பேர்பார்வை குழுவின் பிரேரணை ஒன்றை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பித்திருந்தோம். அந்த அறிக்கையில் 2020 முதல் 2030 வரையான கல்வித்துறை தொடர்பான 10 வருட திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. விஞ்ஞானம்,கணிதம், தொழில்நுட்பம், பொறியியல் ஆகிய 4 பாடங்கள் தொடர்பில் இலங்கையில் கல்வி அமைப்பு எவ்வாறு தயாரிக்கப்படுகிறது என்பது தொடர்பிலே அதில் கலந்துரையாடப்பட்டிருக்கிறது.

3 வருடங்கள் 300க்கும் மேற்பட்ட கல்வியலாளர்களுடன் கலந்துரையாடி தயாரிக்கப்பட்ட அறிக்கையே நாடாளு மன்றத்துக்கு அன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

கு றிப்பாக பரீட்சையை அடிப்படை யாக்கொண்ட கல்வி திட்டத்துக்கு நாங்கள் அன்றும் எதிர்ப்பு தெரிவித்தோம் தற்போதும் அந்த நிலைப்பாட்டில்தான் இருக்கிறோம். பரீட்சையை அடிப்படையாக்கொண்ட கல்வி திட்டத்தினாலே மாணவர்கள் மன அழுத்தங்களுக்கு ஆளாகின்றனர். அதனால் புதிய விடயங்கள் தொடர்பில் சிந்திக்கின்ற மாணவர் சமூகத்தை கட்டியெழுப்புகின்ற விதத்திலேநாங்கள்எமதுகல்விமறுசீரமைப்பு வரைபை தயாரித்திருந்தோம்.

இந்த வரைப்புக்குள் வரலாறு மற்றும் அழகியற் பாடங்களை கற்றுக்கொள்ள முடியுமானவகையில்அதனைவேறாகினோம். மாறாக இந்தப் பாடங்களை நீக்கவில்லை. மாறாக விரும்பியவர்களுக்கு தெரிவு செய்துகொள்ள முடியுமான வகையில் நாங்கள் திட்டங்களை தயாரித்தோம்.

அத்துடன் பரீட்சைகள் அனைத்தையும் ஒரே தடவையில் நீக்காமல் படிப்படியாக அதனைக் குறைக்கும் வகையில் நடவடிக்கை எடுத்திருந்தோம். பரீட்சையை அடிப்படையாக்கொண்டு அல்லாமல், அறிவை அடிப்படையாக்கொண்ட கல்வி முறை தொடர்பாகவே நாங்கள் கலந்துரையாடி வந்தோம். தற்போது கல்வி அமைச்சரான பிரதமர் கல்வி மறுசீரமைப்பு தொடர்பில் தெரிவித்து வரும் விடயங்களின் அடிப்படை, எமது அறிக்கையில் இருந்து பெறப்பட்டவைகளாகும். அதனையிட்டு நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்.

எந்த ஆளும்தரப்பாக இருந்தாலும் நல்லவிடயங்களை செய்யும்போது அதற்கு நாங்கள் ஆதரவளிக்க வேண்டும். இல்லாவிட்டால் எமது கல்வி முறைமைகள், பரீட்சையை அடிப்படையாக்கொண்டு செல்லும்போது எமது பி ள்ளைகள் மன அழுத்தங்களுக்கு ஆளாகின்றனர். அதனால் ஆளும்தரப்பு தெரிவித்துவரும் கல்வி மறுசீரமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை ஆராய்ந்து பார்த்து, அதற்கு ஆதரவளிக்கவேண்டும். இல்லாவிட்டால் இந்த விடயம் தொடர்ந்தும் இழுத்தடிக்கப்படும். அதனால் எமது எதிர்கால மாணவர் சமூகமே பாதிக்கப்படப்போகின்றனர் என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com




முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557


JRIDE
இலங்கையின் பயணிகள் செயலி
SRI LANKA'S
TAXI APP FROM JAFFNA
5%
இப்போது நாம்
இலங்கை முழுவதும்
காத்திருப்புக்கு விடுதலை!
www.jride.lk
மகிழ்ச்சியான பாதுகாப்பான பயணம் திருப்தியான கட்டணம்!